**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS )

| | |
|---|---|
| Case No. | : CC No. 642/2025 |
| Deposition of witness for Prosecution | : P.W– 1 |
| Name | : பவித்ரா, வயது 22 |
| Father Name/Husband Name | : ஹரிஹரசுதன் |
| Village | : குருவிகுளம் |
| Taluk | : திருவேங்கடம் |
| Calling | : நர்ஸ் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of May 2026.

**(Accused present).**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது குருவிகுளத்தில் வசித்து தனியாரில் நர்ஸ் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகாரை என்னுடைய Redmi செல்போன் கோவில்பட்டி ரயில்வே நிலையம் அருகே காணாமல் போனதால் புகார் கொடுத்தேன். அந்த புகாரில் அறிவேன் சாட்சியாக எனது அண்ணன் அரசனும் கையொப்பம் செய்துள்ளார். **(அந்த புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** . போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு வழங்கப்பட்டு பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

2 கடந்த 16.06.2025 ஆம் தேதி இரவு 09.00 மணியளவில் நானும், எனது அண்ணன் அரசன் என்பவரும் TN 69 BE 3915 என்ற பதிவெண் கொண்ட TVS star city பைக்கில் கோவில்பட்டி – திருநெல்வேலி NH சர்வீஸ் ரோட்டில் சென்று கொண்டிருந்தபோது அங்கே ரோட்டில் உள்ள ஏ.எஸ்.எல்.ஆர் என்ற காபி கடைக்கு

அருகில் வண்டியை நிறுத்தி நான் எனது செல்போனுடன் இறங்கி நின்றபோது பின்னால் இருந்து TN 67 H9679 என்ற பதிவெண் கொண்ட Super splender பைக்கில் வந்த ஆஜர் எதிரி திலிப்பன் எனது கையில் வைத்திருந்த சுமார் 8000 மதிப்புகள் Redmi android black colour செல்போனை பறித்து சென்றதகாவும், இந்த சம்பவம் குறித்து நீங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியம் சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.